**ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபை - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சபையின் "சபை" மற்றும் அதன் துணைக்கம்பனிகளின் "குழுமம்" 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக்கூற்று, விரிவான வருமானக் கூற்று, மூலதன மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் கூடிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என நான் கருதும் எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கங்களை தவிர்த்து, சபையின் மற்றும் குழுவின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் எனும் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்கும் நோக்கத்திற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பான முகாமைத்துவத்தினதும் மற்றும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு ஏற்ற வகையில் அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் இயலுமையை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாக இருப்பதுடன் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும்

கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினைப் பயன்படுத்துதல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துவதும் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பாகப் பரீட்சிக்கும் பொறுப்பு, அது தொடர்பான ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம், நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான ஏடுகள் மற்றும் அறிக்கைகளை முறையாகப் பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

----------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும்இ இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவகம் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் காரணமாக நிறுவகத்தின் தொடர்ந்து இயங்குவது தொடர்பாக போதியளவில் நிச்சயமற்ற நிலைமையொன்று இருக்கின்றதா என்பது தொடர்பாக பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டிற்காக நிறுவகத்தின் தொடர்ந்தியங்குவது தொடர்பாக அடிப்படையின் பயன்பாட்டின் பொருத்தப்பாட்டினை தீர்மானிக்கின்றது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பாக வெளிப்படுத்துவதற்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன் அவ்வெளிப்படுத்தல்கள் பொருண்மையாக இல்லாதிருந்தால் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலைமையை முடிவுறுத்த நேரலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலம் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காகக் கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது நிதியத்தின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட வேறு பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க நிதியம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்

## 1.5 நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய கணக்கீட்டு நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கைக் கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 51 மற்றும் 61 ஆம் பிரிவுகளின் பிரகாரம் அசையாச் சொத்துக்களுக்கான பயனுள்ள ஆயுட் காலம் மற்றும் தேய்மான முறை வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும் சபை | எதிர்காலத்தில் அறிமுகப்படுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் கொள்கையின் மூலம் சபையின் நிலையான சொத்துக்களின் தேய்மான கொள்கை தேய்வடையும் மீதி | சொத்துக்களை மீள மதிப்பீடு செய்து நிதிக் கூற்றுக்களில் தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட |

| | | |
|---|---|---|
| அதற்கமைய நடவடிக்கை எடுக்கவில்லை. 2021 திசம்பர் 31ஆம் திகதியில் சபையின் அசையாச் சொத்துக்களின் மொத்த செலவு ரூபா.54.48 மில்லியனான சொத்துக்கள் 20 வருடங்களுக்கும் அதிக காலம் தொட்டு தேய்வடையும் மீதி முறையின் கீழ் தொடர்ந்தும் தேய்வடைந்து உள்ளபோதிலும், அந்த சொத்துக்களின் இடையே இன்னமும் பயன்படுத்தப்படும் சொத்துக்களை அடையாளம் கண்டு பயனுள்ள ஆயுட்காலம் மற்றும் தேய்வுமுறைமை சரியான வகையில் மீளாய்வு செய்யப்படாது மதிப்பிடப்பட்ட குறைபாட்டை இலங்கைக் கணக்கீட்டு நியமம் 8இன் பிரகாரம் திருத்துவதற்கும் இதுவரையிலும் பயன்படுத்தப்படாத சொத்துக்களைப் பொருத்தமான வகையில் அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | முறையில் இருந்து இலகு வழிமுறைக்கு மாற்றுவதற்கு எதிர்பார்க்கப்படுவதுடன், அதன் பின்னர் இவ்வாறான தவறுகள் எழாது. அதே போன்று தேவைப்பாட்டின் அடிப்படையில் முழுமையாகத் தேய்வடைந்த பயன்பாட்டில் உள்ள சொத்துக்கள் இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 79 ஆம் பந்திக்கு அமைய வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கின்றோம். | வேண்டும் என்பதாகும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் 1981 ஆம் ஆண்டு தொடக்கம் 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சேவை வழங்குனர்கள் 4761 பேருக்கு உரியதாக 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் மொத்தமாக அறவிடப்பட்டிருந்த ரூபா.862.78 மில்லியன் அங்கத்துவப் பணம் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சபைச் சட்டத்தின் 16 ஆம் பிரிவின் பிரகாரம் அந்தந்த அங்கத்தவர்களின் தனிநபர் கணக்குகளில் வரவு வைக்கப்படாது வேறு தற்காலிகக் கணக்குகளில் சேமிப்பில் இடப்பட்டிருந்தன. இதன் காரணமாக அங்கத்தவர்களுக்குத் தமது அங்கத்துவ பணத்தை மீளப் பெறும்போது சிக்கல் நிறைந்த நிலைமைகள் ஏற்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. | இந்த அங்கத்துவப் பணத்தில், ரூபா.189 மில்லியன் தொகை 2022 ஜூன் 20 ஆம் திகதி வரையில் ஒவ்வொரு அங்கத்துவ கணக்குகளுக்கும் வரவு வைக்கப்பட்டிருந்தன. அதற்கமைய 2022 ஜூன் 20 ஆம் திகதி வரையில் மேலும் சேவை வழங்குனர்கள் 3722 பேரிடம் அறவிடப்பட்ட ரூபா.645 மில்லியன் தொகை அந்தந்த அங்கத்தவர்களின் கணக்குகளுக்கு வரவு வைக்கப்பட வேண்டி உள்ளது. இதற்கு மேலதிகமாக அங்கத்துவ பணம் வங்கியில் இடப்படும் அதற்காக தமது சபையினால் புறப்பட்டு வரும் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ள உறுதி செய்யப்படாத/அறிந்து கொள்ளப்படாத தொகை நிச்சயமற்ற ஒரு கணக்கில் வரவு வைக்கப்படுவதுடன் 2022 மே 31 ஆம் திகதி வரையில் நிச்சயமற்ற கணக்கு மீது ரூபா.16.24 மில்லியன் வரையில் குறைந்துள்ளது. | அங்கத்துவப் பணம் வரவு வைக்கப்பட வேண்டிய அங்கத்தவர்களைச் சரியாக மற்றும் உடனடியாக அடையாளம் காணக்கூடிய வகையில் அங்கத்துவப் பணம் அறவிடப்படும் முறைமைகளை அபிவிருத்தி செய்தல் மற்றும் அடையாளம் காணப்படாத அங்கத்துவப் பணத்தினை உடனடியாக அறிந்து கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை ஏற்படுத்தல் வேண்டும். |

## 1.6 பெறப்பட வேண்டிய மற்றும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறப்பட வேண்டிய தொகை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கத்தவர்களுக்கான பெறப்பட வேண்டிய மொத்தத் தொகையான ரூபா.315.76 மில்லியன் நிலுவை அங்கத்துவக் கட்டணம் மற்றும் மிகைவிதிப்பு என்பவற்றை அறவிட்டுக் கொள்ளுவதற்காக நாடு முழுவதிலும் 3360 வழக்குகள் தொடுக்கப்பட்டிருந்தன. அவற்றுள் செயற்படுத்தப்பட வேண்டிய மட்டத்தில் காணப்படும் வழக்குகள் மற்றும் திறந்த எழுத்தாணை எண்ணிக்கை 1070 ஆக உள்ளதுடன் அந்த வழக்குகளுக்கு உரிய அறவிட வேண்டியதாகக் காணப்படும் தொகை ரூபா.44.70 மில்லியன் ஆகும். இவ்வாறு நிலுவை அங்கத்துவ பணம் மற்றும் மிகைவிதிப்பு அறவிடப்படுவதற்குத் தாமதமாகும் காரணத்தால் அங்கத்தவர்களுக்கு தமது அங்கத்துவ பணத்தை இழக்கும் ஆபத்து காணப்படுகின்றது என்பது அவதானிக்கப்பட்டது. | இந்த வழக்குகள் நிரந்தரமாக செயலிழந்த நிலையில் காணப்படாததுடன் அந்த வழக்குகள் தொடர்பாக உரிய நீதிமன்றங்களில் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளுக்கு இணங்க தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் அந்த வழக்குகளை அழைத்து உரிய நிலுவைத் தொகையினை அறவிடும் முறையான சட்ட ரீதியான வழிமுறை பின்பற்றப்படுகின்றது. எழுத்தாணை வழங்கப்பட்டுள்ள வழக்குகளுக்கு உரிய எழுத்தாணை நகல்கள் உரிய நீதிமன்றங்களில் வழக்கு விசாரணைகளுக்குக் கொண்டு செல்லப்பட்டு அந்த எழுத்தாணைகள் உடனடியாக நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | அங்கத்தவர்களின் உரிமைகளை உறுதி செய்து கொள்வதற்காக அறவிடப்பட வேண்டிய தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | பல வருடங்களாக எல்கடுவை பெருந்தோட்ட நிறுவனத்திடம் இருந்து பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய கடனீட்டு வட்டித் தொகையில் இன்னமும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய ரூபா.9.39 மில்லியன் தொகை 2021 திசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | இந்த நிலுவைத் தொகையை செலுத்துமாறு குறித்த நிறுவனத்திற்குப் பல கடிதங்கள் அனுப்பப்பட்டு உள்ளதுடன் இறுதியாக 2022 ஜனவரி 06 ஆம் திகதி கடிதமொன்று அனுப்பப்பட்டுள்ளது. கொவிட் நிலைமைக்கு முகம்கொடுத்து நிறுவனம் நிதி சிக்கல்களுக்கு உட்பட்டுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். | தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | தற்போது கலைக்கப்பட்டு வரும் வணிக் நிறுவனத்தின் உறுதிப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா. 12.17 மில்லியன் தொகையும் மற்றும் கடன் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா. 7.45 மில்லியன் தொகையும் முறையே 2002 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் மதிப்பிழக்கப்பட இருந்தன. மேலும், வணிக் நிறுவனத்தின் கடன் பத்திர முதலீடுகளில் 2006 திசெம்பர் 31 ஆம் திகதி வரையில் அறவிடப்பட | இந்த நிறுவனத்தை கலைப்பதற்காக மூன்றாம் தரப்பினரால் செய்யப்பட்டிருந்த கோரிக்கையின் அடிப்படையில் கலைப்பாளர் ஒருவரை நியமிக்குமாறு நீதிமன்றத்தினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த நடவடிக்கை இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை. | தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

வேண்டிய வட்டி வருமானம் ரூபா. 15.21 மில்லியன் மற்றும் உறுதிப் பத்திரங்களில முதலீடுகளில் அறவிடப்பட வேண்டிய வட்டி வருமானம் ரூபா. 367,724 தொகையும் அறவிடப்பட வேண்டிய தொகையாகக் காணப்பட்டது. அந்த தொகையினை அறவிடுவதற்காக சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு இருந்த போதிலும் 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அறவிட்டுக் கொள்ளுவதற்கு சபையினால் முடியாது போயிருந்தது.

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1954 இன் 19கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டம் | மேலதிக நேரத்திற்காக கொடுப்பனவு செய்கையில் ஒரு மணித்தியால மேலதிக நேரத்திற்கு பொதுவாக ஒரு மணித்தியாலத்திற்கான சம்பளத்தைப் போன்று ஒன்றரை மடங்கு செலுத்தப்பட வேண்டிய போதிலும், சபையினால் ஒரு மணித்தியால மேலதிக நேரத்திற்கு ஒன்றரை மணித்தியாலம் மற்றும் சனி / ஞாயிறு தினங்களில் 8 மணித்தியால மேலதிக நேரம் பூர்த்தியாவதுடன் ஒரு நாள் சம்பளத்தினையும் சேர்த்து மேலதிக நேரக் கொடுப்பனவு வழங்கப்பட்டிருந்தது. இதற்கமைய, மீளாய்வு ஆண்டில் சபையின் மேலதிக நேர செலவு ரூபா. 20,455,000 ஆக இருந்தது. மேலும், சட்டத்தின் பிரகாரம் சபையின் உத்தியோகத்தர்கள் வாரத்திற்கு ஐந்தரை நாட்கள் சேவையாற்ற வேண்டியதுடன் வருடாந்த விடுமுறையாக 21 நாட்களுக்கு மட்டுமே இடமளிக்கப்பட்டுள்ள | 1988 ஆம் ஆண்டு தொடக்கம் சபையினால் கடை மற்றும் அலுவலக ஊழியர் சட்டத்தின் விதிகளுக்கு அமையவே ஊழியர்களுக்கு மேலதிக நேரத்திற்காக கொடுப்பனவு வழங்கப்பட்டு வந்துள்ளதுடன், அதற்கு மேலதிகமாக விடுமுறை நாளொன்றில் 8 மணித்தியாலத்தினைப் பூர்த்தி செய்வதன் அடிப்படையில் மேலதிக நேரத்திற்கு மேலதிகமாக ஒரு நாள் சம்பளத் தொகையும் வழங்கப்படுகின்றது. இந்த சிறப்புரிமை பல காலம் தொட்டு அனுமதிக்கப்பட்டு வந்துள்ளது என்பதால் அதனை அகற்றுவது ஊழியர்களிடையே அமைதியின்மையை ஏற்படுத்தி நிறுவனத்தின் தொழில் அமைதியினைக் குலைக்கும் என்பதனால் அதை மாற்றுவதற்கு தற்போதைய முகாமைத்துவத்திற்கு சிரமமாக உள்ளது. மேலும், ஊழியர்களுக்கு வருடாந்த விடுமுறை 42 நாட்கள் பல காலம் தொட்டு வழங்கப்பட்டு வந்துள்ளதுடன், அது ஏனைய கூட்டுத்தாபனம் மற்றும் சபைகளுக்கு அமைய மேற்கொள்ளப்பட்டுள்ளது. | கடை மற்றும் அலுவலக சட்டத்தின் கீழ் ,யங்கும் நிறுவனமாக மேலதிக நேரம் மற்றும் விடுமுறை தொடர்பில் அந்த சட்டத்தின் ஒழுங்குவிதி முறைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | போதிலும் அதற்கு முரணாக சபையின் உத்தியோகத்தர்களுக்கு வருடாந்தம் 42 நாட்கள் விடுமுறை பெற்றுக் கொள்ளுவதற்கும் வாரத்தில் 5 நாட்கள் மட்டுமே சேவையாற்றவும் இடமளிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2003 ஜூன் 02 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் பீஈடி/12 கொண்ட அரச வணிக சுற்றறிக்கையின் 9.14.2 ஆம் பிரிவு. | சபையில் தற்போது செயற்படுத்தப்படும் நிதி மற்றும் நிர்வாக செயற்பாடு முறைமை கோவை திறைசேரியிடம் சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சபையானது சட்டபூர்வ நிறுவனம் என்பதால் நிதி கொடுக்கல் வாங்கல்களில் நிதிப்பிரமாணக் கோவையின் விதிகள் அதே முறையில் பயன்படுத்தப்படுகின்றது. அவ்வாறு இருப்பினும் செயற்பாட்டு நடவடிக்கைகளை நிறைவேற்றிக் கொள்ளுவதை இலகு படுத்துவதற்காக உள்ளக ரீதியில் தயாரிக்கப்பட்ட நிதி செயற்பாட்டு முறைமை ஒன்று தயாரிக்கப்பட்டு உள்ளதுடன், அது வெறும் அறிவுரை தொகுப்பே அன்றி சட்டரீதியான ஆவணமாக பயன்படுத்தப்படுவது இல்லை. அவ்வாறு இருக்க, சபையின் நிதி செயற்பாட்டு முறைமை கோவைக்காக கணக்காய்வு குழு மற்றும் பணிப்பாளர் சபையின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், திறைசேரியின் அனுமதிக்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | திறைசேரியின் அனுமதியினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | 1994 ஜூன் 14 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் 95 கொண்ட அரச வணிக சுற்றறிக்கை மற்றும் 2000 ஜனவரி 11 ஆம் திகதியிடப்பட்ட இலக்கம் பீஎப்/பீஈ 5 கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கை. | திறைசேரியின் முறையான அனுமதியின்றி ஊழியர்களுக்கும் மற்றும் பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களுக்கும் மேலதிகக் கொடுப்பனவு, ஊக்கக் கொடுப்பனவு மற்றும் வேறு வகையிலான நிதி பிரதிபலன்களும் வழங்கப்படலாகாது எனினும், சபையினால் 2021 ஆம் ஆண்டில் மீதப்படுத்தப்பட்ட விடுமுறை அடிப்படையிலான கொடுப்பனவாக ரூபா 23.77 மில்லியனும், வைத்திய செலவு மீள் நிரப்பலுக்காக ரூபா 96.48 மில்லியனும், வீட்டுக் கடன் மீள் நிரப்பலுக்காக ரூபா 10.68 | மீதப்படுத்தப்பட்ட விடுமுறைகள் பலகாலமாக அனுபவிக்கப்பட்டு வந்த சிறப்புரிமை என்பதால் ஊழியர் இடையே அமைதியின்மை ஏற்படக்கூடும் என்பதனால் தற்போதைய முகாமைத்துவத்திற்கு அதனை மேற்கொள்ளுவது சிரமமாக உள்ளது. வைத்திய செலவு யோசனை திட்டம் 1991 ஆம் ஆண்டு தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதில் வைத்திய செலவு மீள் நிரப்பல் ஊழியர்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்படுவதனால் திறைசேரி அனுமதி தேவையற்றது எனக் கணக்காய்வு குழுக் கூட்டத்தில் | சுற்றறிக்கையின் ஒழுங்கு விதிகளின் பிரகாரம் அனைத்து கொடுப்பனவு முறைமைகளுக்கும் திறைசேரியின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மில்லியனுமாக மொத்தமாக ரூபா 130.93 மில்லியன் தொகை திறைசேரியின் முறையான அனுமதியின்றி பதவியணியினருக்கு வழங்கப்பட்டிருந்தது. | கலந்துரையாடப்பட்டது. வீட்டுக் கடன் மீள் நிரப்பல் அனுமதிக்காக கடிதமொன்று அனுப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ஈ) | இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் பிரமாணம் 1645 மற்றும் 1647 | சபைக்குச் சொந்தமான வாகனங்களுக்கு உரிய லொக் புத்தகம் மற்றும் நாளாந்த ஓட்டக் குறிப்பு போன்ற தேவையான தகவல்கள் உள்ளடக்கப்பட்டு இற்றைப்படுத்திப் பேணிச் செல்ல வேண்டி இருந்த போதிலும், சபையில் லொக் புத்தகம் மற்றும் நாளாந்த ஓட்டக் குறிப்பு அவ்வாறு இற்றைப்படுத்தப்பட்டு பேணப்பட்டிருக்கவில்லை.<br>மேலும், 268 ஆவது பொதுப் படிவத்தின் பிரகாரம் நாளாந்த ஓட்டக் குறிப்பினை வைத்திருக்க வேண்டியதுடன் அதில் பயணம் செய்த தூரம், எரிபொருள் ஒரு லீட்டருக்கு குறிக்கப்பட்டுள்ள கிலோமீட்டர் எண்ணிக்கை, ஆரம்ப மற்றும் இறுதி மைலோ மீட்டரின் பெறுமதி, கிலோமீட்டர் அளவு என்பன குறிப்பிடப்பட்டு ஓட்டக் குறிப்பு நாளாந்தம் சமப்படுத்தபட வேண்டிய போதிலும், சபையினால் பயன்படுத்தப்படும் நாளாந்த ஓட்டக் குறிப்புப் புத்தகங்களில் அவ்வாறு தினசரி சமப்படுத்தல் இடம்பெற்று இருக்கவில்லை. அதே போன்று வாகனங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களினால் தமது பொறுப்பில் உள்ள மோட்டார் வாகனங்கள் தொடர்பான தகவல்கள் குறிக்கப்பட்ட பட்டியல் ஒன்று வைத்திருக்க வேண்டிய போதிலும், அவ்வாறான ஆவணம் ஒன்று பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது சபையினால் தயாரிக்கப்பட்ட ஓட்டக் குறிப்புப் புத்தகங்கள் பயன்படுத்தபடுவதுடன் எதிர்காலத்தில் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பொது ஓட்டக் குறிப்புப் புத்தகங்களைப் பயன்படுத்துவதற்கு முகாமைத்துவத்தின் அனுமதியினைக் கோருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறு இருப்பினும் எம்மால் பயன்படுத்தப்படும் ஓட்டக் குறிப்புப் புத்தகத்தில் ஆரம்ப மீட்டர், இறுதி மீட்டர் மற்றும் செலுத்தப்பட்ட தூர அளவு என்பன குறிப்பிடப்படுகின்றது. மேலும், உத்தியோகத்தர்களின் வாகனங்கள் தொடர்பிலும் எதிர்காலத்தில் அறிக்கையினைப் பேணுவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது.. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | 2016 திசம்பர் 29 ஆம் திகதியிடப்பட்ட அரச நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 30/2016 இன் 3.1 ஆம் பந்தி | ஒவ்வொரு எரிபொருள் பரீட்சிப்பின் பின்னரும் 12 மாத கால எல்லையின் பின்னர் அல்லது 25,000 கிலோ மீட்டர் தூரம் செலுத்தப்பட்டதன் பின்னர் அல்லது என்ஜின் தொடர்பான முக்கிய திருத்தல் வேலையின் பின்னர் போன்ற காரணங்களுள் முதலாவதாக ஏற்படும் சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரீட்சிப்பு செய்யப்பட வேண்டிய போதிலும் சபைக்குச் சொந்தமான வாகனங்கள் தொடர்பில் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது என கணக்காய்வின் போது சான்றுகள் அவதானிக்கப்படவில்லை. அதே போன்று அந்த சுற்றறிக்கையில் 3.3 ஆம் பந்திக்கு அமைய வாகனத்தில் எரிக்கப்படும் எரிபொருள் தொடர்பான குறிப்புகள் பேணப்பட்டு வந்துள்ளது என்பதும் அவதானிக்கப்படவில்லை. | 2021 ஆம் ஆண்டில் முழு உலகத்திற்கும் தாக்கத்தினை ஏற்படுத்திய கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக இந்த எரிபொருள் எரிப்பு அறிக்கை பெற்றுக் கொள்வதற்குத் தேவையான அளவு அலுவலகங்கள் நடாத்தப்பட முடியவில்லை. 2022 ஆம் ஆண்டிற்கு நமது சபை வாகனங்களுக்கான எரிபொருள் எரிப்பு அறிக்கையைப் பெற்றுக் கொள்வதற்கான அங்கீகாரம் 2022 பெப்ரவரி 10 ஆம் திகதி பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் நிலவும் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பரீட்சிப்பினைத் தாமதப்படுத்த நேரிட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் எரிக்கப்படும் எரிபொருள் தொடர்பான பரீட்சிப்பு செய்யப்படுதல் வேண்டும். |
| (ஊ) | நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சரின் 2014 நவம்பர் 10 ஆம் திகதி இடப்பட்ட இலக்கம் PE/IN/ETF/Gen கொண்ட கடிதம் | அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியுடன் இணைந்து செயற்படும் சபையின் பதவியணியினருக்கு வீட்டுக் கடன் பெற்றுக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் 4.2 சதவீத வட்டி வீதத்தின் கீழ் அந்த கடனை பெற்றுக் கொடுப்பதற்கு இணக்கப்பாட்டைத் தெரிவித்திருந்த போதிலும் சபையினால் 4 சதவீத வட்டி வீதத்திற்கு ரூபா 02 மில்லியன் வரையில் 2021 ஆம் ஆண்டில் பதவியணியினருக்கு வீட்டுக் கடன் வழங்கியிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது. | வீட்டுக் கடன் தொகையினைப் பெற்றுக் கொடுப்பதற்கு உரியதான 2021 மே 21 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் வங்கியுடன் புதிய ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் கடன் வழங்கப்படும் போது முதலாவது 02 மில்லியனுக்கு 4.2 சதவீத வட்டியும் மற்றும் மீதி மில்லியன் தொகைக்கு 7 சதவீத வட்டியும் அறவிடப்படும். அதற்கமைய புதிய ஒப்பந்தத்திற்கு அமைய இந்த யோசனைத் திட்டத்தில் காணப்பட்ட அனைத்து குறைபாடுகளையும் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துக் கொள்கிறேன். | நிதி அமைச்சின் இணக்கப்பாட்டுக்கு அமைய வீட்டுக் கடனுக்கான வட்டி அறவிடப்படுதல் வேண்டும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியுடன் இணைந்து செயற்படும் பதவியணியின் வீட்டுக் கடன் யோசனைத் திட்டத்திற்காக வங்கியுடன் ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கையின் படி உத்தியோகத்தர்களிடமிருந்து மீள அறவிடப்பட்ட மூலதனத் தொகை மற்றும் வட்டித் தொகை 03 மாதத்திற்கு ஒரு தடைவை சபையிடம் மாற்றல் செய்தல் வேண்டும். அவ்வாறிருக்க, அதற்கு முரணாக வங்கியினால் அந்தத் தொகை வருட இறுதியில் வைப்புக் கணக்கு மீதியுடன் சேர்க்கப்பட்டு காட்டப்படுகின்றது என்பது கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக வருடத்தினுள் சேர்க்கப்படும் மூலதனம் மற்றும் வட்டித் தொகைக்காகக் குறித்த வருடத்திற்கு சபைக்கு எதுவிதமான பிரதிபலனும் உரித்துடையது அல்ல என்பதும் அந்தத் தொகை வேறு முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்த முடியாது என்பதும் அவதானிக்கப்பட்டது. 2021 ஆம் ஆண்டில் கடன் மீள அறவிடல் ரூபா 30.11 மில்லியன் மற்றும் வட்டி அறவிடல் ரூபா 6.68 மில்லியன் தொகைக்கு பிரதிபலன் எதுவும் கிடைத்திருக்கவில்லை. | அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி அவ்வப்போது தெரிவித்திருந்த போதிலும் அந்த கடனை மீள அறவிடல் 03 மாதத்திற்கு ஒரு தடைவை சபைக்கு மாற்றல் செய்யப்படவில்லை. 2021 மே 21 ஆம் திகதி தொடக்கம் செயற்படும் புதிய உடன்படிக்கைக்கு அமைய கடனை மீள அறவிடல் 03 மாதத்திற்கு ஒரு தடவை அறவிடுவதை முறையாக மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி பெறுபேறு

சமர்ப்பிக்கப்பட்ட ஒன்றிணைந்த நிதிக் கூற்றுக்கமைய மீளாய்வாண்டில் குழுமத்தின் நிதி பெறுபேறு ரூபா.28,595 மில்லியன் மற்றும் சபையின் நிதி பெறுபேறு ரூபா. 28,569 மில்லியன் இலாபமாக இருந்ததுடன் அதற்கு ஒப்பாக கடந்த ஆண்டில் குழுமத்தின் மற்றும் சபையின் இலாபம் முறையே ரூபா.28,017 மில்லியன் மற்றும் ரூபா. 28,007 மில்லியன் ஆகும். அதற்கமைய குழுமத்தின் மற்றும் சபையின் நிதி பெறுபேறு முறையே ரூபா.578 மில்லியனாலும் மற்றும் ரூபா.562 மில்லியனாலும் அதிகரித்துக் காணப்பட்டது. மீளாய்வாண்டில் சபையின் வட்டி வருமானம் ரூபா 698 மில்லியனால் அதிகரித்திருந்தமையே மேற்கூறிய நிதி பெறுபேறின் அதிகரிப்பிற்கு முக்கியமான காரணமாக இருந்துள்ளது.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 முகாமைத்துவத்தின் வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையின் அங்கத்தவர்களுக்காக ஒதுக்கக் கூடிய இலாபம் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரையில் ஒப்பிடும் போது ரூபா 15,346 மில்லியன் தொடக்கம் ரூபா 32,663 மில்லியன் வரையில் படிப்படியாக அதிகரித்து சென்றுள்ளது. ஆயினும், 2015 ஆம் ஆண்டில் அங்கத்தவர்களுக்கு 9 சதவீத வருமான வீதத்தினைப் பெற்றுக் கொடுத்திருந்த போதிலும் 2019 ஆம் ஆண்டு வரையில் அது 8 சதவீதம் வரையில் குறைக்கப்பட்டு இருந்ததுடன் 2021 ஆம் ஆண்டில் அது 7.25 சதவீதம் வரையிலும் மேலும் குறைக்கப்பட்டிருந்தது. | அங்கத்தவர்களுக்காகப் பெற்றுக் கொடுக்கப்படும் வருமான வீதம் 9 சதவீதம் தொடக்கம் 7.25 சதவீதம் வரையில் தொடர்ந்து குறைவினை காட்டப்பட்டுள்ளது இந்தக் காலப் பகுதியிலும் அரசாங்கத்தின் மூலம் எடுக்கப்பட்ட கொள்கை ரீதியிலான தீர்மானத்தின் அடிப்படையில் கொள்கை வட்டி சதவீதங்கள் குறைக்கப்பட்டதன் பலனாக சபையின் வருமானமும் அந்த விகிதாசாரத்தில் குறைந்த பெறுமதியினைக் கொண்டுள்ளது என்பதாகும். அரச நிதிக் கொள்கை நேரடியாக சபையின் வருமானத்தில் தாக்கத்தினை ஏற்படுத்துவதால் சபையின் வருடாந்த வருமான உற்பத்தித் திறன் மாற்றமடையும். | அங்கத்தவர்களின் சந்தாப் பணத்தில் அமைக்கப்பட்ட நிதியம் என்பதால் அங்கத்தவர்களுக்கு சிறந்த பிரதிபலனை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | சபையின் அங்கத்தவர்களுக்கு பல்வேறு நலனோம்பல் சேவைகளைப் பெற்றுக் கொடுப்பதுடன் அந்த ஒவ்வொரு நலனோம்பல் சேவைகளின் கீழும் அங்கத்தவர் ஒருவருக்கு வழங்கப்படும் அதிகபட்ச நிதியுதவிப் பெறுமதி கடந்த 11 வருடங்களுக்கும் 5 வருடங்களுக்கும் இடையிலான காலத்தின் பின்னர் அதிகரிக்கப்பட்டு இருக்காததுடன் அந்தப் பெறுமதியை உயர்த்துவது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்க வில்லை. மேலும், சபையினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள மேலே குறிப்பிடப்பட்ட அங்கத்தவர் பிரதிபலன் தொடர்பாக அங்கத்தவர்களை தெளிவுபடுத்துவதற்கு செயற்படுத்தப்பட வேண்டிய வேலைத் திட்டங்கள் 2021 ஆம் ஆண்டு செயற்பாட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு இருந்த போதிலும் அந்த வேலைத் திட்டங்கள் குறித்த வருடத்தினுள் நடைமுறைப்படுத்துவதற்கு | சபையின் மூலம் அங்கத்தவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கப்படும் நலனோம்பல் பிரதிபலன்கள் அங்கத்தவர்களிடம் சந்தாப் பணம் அறவிடப்படாது வழங்கப்படும் பிரதிபலன் ஆகும். அதனால் சபையின் மொத்த நிதியினால் தாங்க முடியாத அளவு வரையில் இந்த நலனோம்பல் பிரதிலாபத்தினை விரிவுபடுத்தல் விவேகமான நிலைமை அல்ல. எவ்வாறாயினும், தற்போது வழங்கப்படும் நலனோம்பல் பிரதிபலன்களின் நிதிப் பெறுமதி தற்கால நிலைமைகளைக் கருத்திற் கொண்டு திருத்துவதற்கு பணிப்பாளர் சபையின் கவனத்தை ஈர்த்து உள்ளதுடன் புதிய நலனோம்பல் பிரதிபலன்கள் பல அறிமுகப்படுத்துவதற்கும் தேவையான அடிப்படைக் கருத்துக்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றது. | அங்கத்தவர்களின் சந்தாப் பணத்தில் அமைக்கப்பட்ட நிதியம் என்பதால் அங்கத்தவர்களுக்கு சிறந்த பிரதிபலனை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், அபிவிருத்திக்காக மேற்கொள்ளப்படும் செலவுகளும் தொடர்ந்து குறைந்துள்ளது என்பது அவதானிக்கப்பட்டுள்ளது. | | |
| (இ) | அங்கத்தவர்களுக்கு வழங்கப்படும் தொழில் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் அங்கத்தவர் ஒருவருக்கு ஆயுள் காலத்தினுள் வைத்தியச் செலவினை மீள்நிரப்புவதற்காக அதிகபட்சம் ரூபா. 50,000 வழங்கப்படுவதுடன் இந்த அதிகபட்ச தொகை 12 வருடங்களுக்கும் அதிகமான காலம் தொட்டு உயர்த்துவது தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்க வில்லை. எனினும், சபையின் பதவியணியினர் மேற்கூறிய காப்பீட்டுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டு இருந்தபோதிலும் திறைசேரியின் முறையான அங்கீகாரம் இல்லாத சபையின் பதவியணியினருக்கு வழங்கப்படும் வைத்திய செலவு மீள்நிரப்பும் திட்டத்தின் கீழ் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பெற்றுக் கொள்ளப்படும் சிகிச்சை மற்றும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்படாது பெற்றுக் கொள்ளப்படும் சிகிச்சை என்பவற்றுக்கு வருடத்திற்கு வழங்கப்படும் வைத்திய செலவு மீள்நிரப்பு கொடுப்பனவு முறையே ரூபா. 75,000 தொடக்கம் ரூபா. 100,000 வரையிலும் மற்றும் ரூபா. 40,000 தொடக்கம் ரூபா. 60,000 வரையிலும் 2018 ஆம் ஆண்டில் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, தொழில் காப்பீடு திட்டத்தின் கீழ் மருத்துவ உதவிக்கான செலவு ரூபா 11.84 மில்லியனாக காணப்பட்ட போது, பதவி அணியினரின் வைத்திய செலவு மீள்நிரப்பல் செலவு ரூபா 96.48 மில்லியனாக இருந்தது. | சபையின் பதவி அணியினர் 850 பேராக இருப்பதுடன், அங்கத்தவர்களின் எண்ணிக்கை சுமார் 2.8 மில்லியன் அளவாகும். அதற்கமைய ஊழியர்களுக்கு பெற்றுக் கொடுக்கப்படும் வைத்திய செலவு மீள் நிரப்பல் கொடுப்பனவை 2018 ஆம் ஆண்டு தொடக்கம் அதிகரிப்பதற்கு சபையில் செயற்பட்டு வரும் தொழிற்சங்கங்களின் யோசனைகளுக்கு பணிப்பாளர் சபை அனுமதியினை வழங்கியுள்ளது. தொழில் காப்பீட்டு திட்டத்தின் கீழ் பெற்றுக் கொடுக்கப்படும் தொகையினைத் திருத்துதல் 2.8 மில்லியன் செயற்படும் அங்கத்தவர்களுக்கு உரித்தானது என்பதால் அது தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானம் சபையின் நிதி நிலைமையில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய முக்கிய காரணமாக இருக்கக் கூடும். | அங்கத்தவர்களின் சந்தாப் பணத்தில் அமைக்கப்பட்ட நிதியம் என்பதால் அங்கத்தவர்களுக்கு சிறந்த பிரதிபலனை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | சபையின் அங்கத்தவர்களுக்காக செயற்படும் வைத்திய நிவாரண யோசனை முறைக்காக அங்கத்தவர், வாழ்க்கைத் துணை | அறவிடப்படும் சந்தாப் பணத்தினை அதிகரிப்பதற்காக எதிர்காலத்தில் தொழிற்சங்கங்களுடன் கலந்துரையாடி உரிய | அங்கத்தவர்களின் சந்தாப் பணத்தில் அமைக்கப்பட்ட அங்கத்துவ |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் அனைத்து தங்கி வாழ்வோருக்காகவும் ஒரு நபருக்கு மாதாந்தம் அறவிடப்படும் சந்தாப் ரூபா. 30 என 10/2011 ஆம் ,லக்க நிர்வாக மற்றும் மனித வள சுற்றறிக்கையின் மூலம் திருத்தம் செய்யப்பட்டதன் பின்னர் 10 வருடத்தினுள் அந்தத் தொகையில் திருத்தம் இடம்பெற்றிருக்கவில்லை. ஆயினும், 2021 ஆம் ஆண்டுக்காக வைத்திய விலைப்பட்டியல் மீள்நிரப்பல் செலவு ரூபா.97.98 மில்லியனாக உள்ளதுடன் அதற்கான பதவியணியினரின் பங்களிப்பு ரூபா. 1.49 மில்லியன் அதாவது 1.52 சதவீதம் மட்டுமே ஆகும். அதற்கமைய மீதி தொகையான ரூபா. 96.52 மில்லியன் அதாவது 98.50 சதவீதம் சபையினால் அங்கத்துவ நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. | வழிவகைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நிதியத்தில் செலவுகளை மேற்கொள்ளுகையில் சிறந்த முகாமைத்துவம் மற்றும் திட்டத்துடனும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய சபைச் சட்டத்தின் 20(1) ஆம் பிரிவு மற்றும் 1988 இன் 47 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய சபை (திருத்தம்) சட்டத்தின் 7 ஆவது பிரிவின் மூலம் செய்யப்பட்ட திருத்தத்தின் பிரகாரம், சபையில் சுய தொழில் செய்வோரை பதிவு செய்வதற்கு இடமளிக்கப்பட்டுள்ளது. ஆயினும் 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் இலங்கையில் அறிக்கையிடப்பட்டுள்ள 2,658,735 சுய தொழிலாளர்களில் நிதியத்தில் அங்கத்தவர்களாகப் பதிவு செய்து கொள்ளப்பட்டோரின் எண்ணிக்கை 42,951 அதாவது 1.66 சதவீதம் மட்டுமாக உள்ளது. நிதியச் சட்டத்தின் மூலம் விசேடமாக தீர்மானிக்கப்பட்டுள்ள அந்தத் துறையினை முன்னேற்றுவதற்கு சபையினுள் வேறான பிரிவொன்றினைத் தாபிக்க செயல் திட்டத்தில் வழிவகை தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், 2021 ஆம் ஆண்டில் புதிதாகப் பதிவு செய்யப்பட்டிருந்த எண்ணிக்கை 256 மட்டுமே ஆகும். | சுயதொழில் மற்றும் புலம்பெயர் சேவை பிரிவில் அங்கத்துவத்தை பெற்றுக் கொள்வது சுயதொழிலாளர்களுக்கு கட்டாயமாக்கப்படாததுடன் தன்னிச்சையாக மேற்கொள்ளப்படுவதாகும். 2019 ஆம் ஆண்டில் சுயதொழில் மற்றும் புலம்பெயர் சேவைக் பிரிவினை அறிமுகப்படுத்திய நவீன வேலைத் திட்டத்தின் கீழ் அந்த வருடத்திற்கு புதிய அங்கத்தவர்கள் 1618 பேரை இணைத்துக் கொள்ளக் கூடியதாக இருந்ததுடன் அது 2018 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 418.8 சதவீத அதிகரிப்பாகும். 2020 ஆம் ஆண்டில் நாட்டில் கொவிட் தொற்றுநோய் பரவியமையுடன் அந்த வேலைத் திட்டத்தினைச் செயற்படுத்துவதற்கு முடியாதிருந்ததுடன் நவீன வேலைத் திட்டத்தின் பிரதிபலனாக 2020 ஆம் ஆண்டுக்கு தொற்றுநோய் நிலைமையிலும் புதிய அங்கத்தவர்கள் 481 பேர்கள் இணைக்கப்பட்டு உள்ளதோடு 2021 ஆம் ஆண்டில் புதிய அங்கத்தவர்கள் 256 பேர் இணைக்கப்பட்டுள்ளனர். | சுய தொழில் செய்வோரை பதிவு செய்வதற்காக முறையான வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | கூட்டுத்தாபன சட்டத்திற்கு அமைய சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் சபைத் தலைவர் ஆவார். எவ்வாறு இருப்பினும், நிதி நடவடிக்கைகள் தொடர்பான நிறுவனமான சபையின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தர் அதன் தலைவர் இருத்தல் வேண்டும் என்பதாக ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்தின் 5(2) ஆம் பிரிவு திருத்தப்பட வேண்டும் என 2016 ஓகஸ்ட் 26 ஆம் திகதி இடம்பெற்ற பொது வணிகம் தொடர்பான செயற்குழு கூட்டத்தில் பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. அவ்வாறு இருக்க, 2021 ஆம் ஆண்டு இறுதி வரையிலும் கூட சட்டத்திற்குத் தேவையான திருத்தம் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இதற்கு உரியதான 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதியச் சட்டத்திற்கான யோசனைக்கான திருத்தல் வரைவு நிதி அமைச்சிடம் அனுமதிக்காக சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அது தொடர்பாக இரு தரப்பு உத்தியோகத்தர்கள் இடையே இடம்பெற்ற கலந்துரையாடலில் நிதி அமைச்சின் கருத்துக்கள் மற்றும் யோசனைகளுக்கு அமைய மீண்டும் வரைவு தயாரிக்கப்பட்டு குறித்த திருத்தங்களைப் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் சமர்ப்பிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. | குறித்த அனுமதிகளை விரைவாகப் பெற்றுக் கொண்டு சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (எ) | 1995 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக அதிகரித்து வந்துள்ள உரிமை கோரப்படாத மரண பிரதிபலன் ரூபா.21.70 மில்லியனும் மற்றும் 2001 ஆம் ஆண்டு தொடக்கம் பேணப்பட்டு வரும் தடுத்து வைக்கப்பட்ட பிரதிபலன் ரூபா. 17.29 மில்லியனுமாக மொத்தம் ரூபா. 38.99 மில்லியன் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் உரிய அங்கத்தவர்களை இனங்கண்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | உரிமை கோரப்படாத மரண பிரதிபலன் கணக்கிற்கு உரியதான 2022 மே மாதம் 31 ஆம் திகதி வரையில் ரூபா.2.45 மில்லியன் தொகை 23 உரிமையாளர்களுக்குச் செலுத்தப்பட்டுள்ளது. திருப்பி அனுப்பப்பட்ட பிரதிபலன் கணக்கிற்கு உரியதான 2022 மே மாதம் வரையில் 71 உரிமையாளர்களினால் கோரப்பட்டுள்ள பிரதிலாபம் ரூபா 3.07 மில்லியன் தொகை செலுத்தப்பட்டுள்ளது. கோரப்படாத நலனோம்பல் பிரதிபலன் கணக்கிற்கு உரியதான 24 பயனாளிகளுக்கு 2022 மே மாதம் வரையில் ரூபா 1.42 மில்லியன் தொகை மீண்டும் செலுத்தப்பட்டுள்ளது. | தீர்க்கப்படாது காணப்படும் உரிமை கோரப்படாத மரண பிரதிபலன், தடுத்து வைக்கப்பட்ட பிரதிபலன்களை வேறு வேறாக கண்டறிந்து தீர்ப்பதற்கு பொருத்தமான வேலைத் திட்டத்தினைத் தயாரித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |
| (ஏ) | 1994 ஆம் ஆண்டு தொடக்கம் 2009 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்கு உரிய உயர்தரம் சித்தியடைந்த மாணவர்களுக்கு செலுத்த வேண்டிய உரிமை கோரப்படாத புலமைப் பரிசில் தொகை ரூபா 1.27 மில்லியன் தொகையினை 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை. | இந்த தொகைக்கு உரிய உரிமையாளர்களைத் தொடர்பு கொள்வதற்குப் போதுமான தகவல்கள் இல்லாதமையினால் இந்த புலமைப்பரிசில் தொகையை செலுத்துவதற்கு முடியாமைக்கான நடைமுறை சிக்கல் எழுந்துள்ளது. அதற்கமைய இந்த தொகை பணிப்பாளர் சபையின் அனுமதியின் கீழ் மீண்டும் சபையின் கணக்கில் வரவு வைக்குமாறு 2022 ஜூன் 09 ஆம் திகதி நிதி அமைச்சில் இடம்பெற்ற கணக்காய்வு மற்றும் | உரிய உரிமையாளர்களை அடையாளம் காண்பதற்கும் முறையான வேலைத்திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டு இந்த மீதியினைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் அறிவுரை வழங்கப்பட்டிருந்தது.

### 3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

| | கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசம்பர் 31 ஆம் திகதியில் பட்டியலிடப்பட்ட 8 நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த சராசரி கிரயம் ரூபா 287.78 மில்லியன் முதலீடுகள் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் பங்குச் சந்தையில் கொடுக்கல் வாங்கல் செய்யப்படாத காரணத்தால் சபைக்கு முதலீட்டு லாபம் பெற்றுக்கொள்ள முடியாது இருந்தது. | 8 நிறுவனங்களில் 3 நிறுவனங்கள் சுற்றுலாத் துறையுடன் தொடர்புடைய ஹோட்டல் நிறுவனங்கள் என்பதால் நாட்டில் சுற்றுலா வியாபாரம் முன்னேறி வரும் சூழ்நிலையில் உண்மையான செலவை விட பங்கு ஒன்றின் சந்தை விலை கூடிய பெறுமதியைக் கொள்ளும்போது முதலீட்டு இலாபத்துடன் விற்பனை செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம். மீதி 5 நிறுவனங்களிலும் பங்கின் விலை உண்மையான செலவை விட கூடிய பெறுமதியைக் கொள்ளுமிடத்து விற்பனை செய்து இலாபத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம். | அங்கத்தவர்களுக்கு ஆகக் கூடிய பலன்கள் கிடைக்கும் வகையில் முதலீட்டுத் தொகுதி முகாமைத்துவப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 திசம்பர் 31 ஆம் திகதியில் பட்டியலிடப்பட்டுள்ளன நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகளில் 15 நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்டிருந்த முதலீடுகளின் சாதாரண விலை ரூபா 1,242.24 மில்லியனான பங்குகளுக்கு 2021 ஆம் ஆண்டில் பங்கிலாப வருமானம் கிடைத்திருக்கவில்லை. அதில் 2 நிறுவனங்களுக்கு 2015 - 2021 காலப் பகுதிக்கும், 2 நிறுவனங்களுக்கு 2019- 2021 காலப் பகுதிக்கும், 3 நிறுவனங்களுக்கு 2020 - 2021 காலப் பகுதிக்கும் பங்கிலாபம் கிடைத்திருக்கவில்லை. | 2019 ஆம் ஆண்டில் இடம் பெற்ற உயிர்த்த ஞாயிறு தாக்குதல் மற்றும் 2019 தொடக்கம் 2021 ஆம் ஆண்டு வரை காணப்பட்ட கொரோனா தொற்றுநோய் நிலைமை காரணமாக பெரும்பாலான நிறுவனங்களின் செயற்பாடுகள் வீழ்ச்சி அடைந்தன. மூலதனச் சந்தைகள் சாதாரண நிலைமைக்கு திரும்பி இலாபகரமான நிலைமையின் கீழ் இலாபப் பங்குகள் எதிர்காலத்தில் வெளியிடப்படக் கூடும் என எதிர்பார்க்கின்றோம். | அங்கத்தவர்களுக்கு ஆகக் கூடிய பலன்கள் கிடைக்கும் வகையில் முதலீட்டுத் தொகுதி முகாமைத்துவப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | National Equity நிதியத்தின் ரூபா 41.68 கிரயமாக அலகுகளுக்காக 2020 மற்றும் 2021 ஆண்டுகளுக்கான பங்கு இலாபங்கள் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. | National Equity அலகு நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் முதலீடு நீண்ட கால முதலீடாவதுடன், முதலீட்டு கிரயம் ரூபா 41.7 மில்லியன் ஆகும். அந்த கிரயத்தின் நான்கு மடங்கினை விஞ்சிய ரூபா 179.9 மில்லியனான தொகை முதலீட்டு வருடம் முதல் 2019 ஆம் ஆண்டு | அங்கத்தவர்களுக்கு ஆகக் கூடிய பலன்கள் கிடைக்கும் வகையில் முதலீட்டுத் தொகுதி முகாமைத்துவப்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | வரையிலும் பங்கிலாபமாக சபைக்கு கிடைத்துள்ளது. எனினும், 2020/2021 ஆம் ஆண்டுகளில் நாட்டில் நிலவிய கொரோனா தொற்றுநோய் பரவல் காரணமாக பெரும்பாலான நிறுவனங்களின் பங்கிலாபம் செலுத்துதல் அந்த ஆண்டுகளில் காணப்படவில்லை. | |
| (ஈ) | சபைக்குச் சொந்தமான நவம் மாவத்தையில் அமைந்துள்ள காணியில் வாகனத் தரிப்பிடம் ஒன்று நடாத்திச் செல்லப்படுவதுடன் ஒரு சில தரப்பினர்களினால் மாதாந்த வாடகை அடிப்படையில் அங்கு வாகனங்களை நிறுத்திவைக்கும் வசதிகள் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. எனினும் குறித்த வாடிக்கையாளர்களுடன் சபையினால் உடன்படிக்கை செய்யப் பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. அந்த வாடிக்கையாளர்களிடம் இருந்து 03 மாத பாதுகாப்பு வைப்புத்தொகை அறவிடப்பட வேண்டி இருந்தபோதிலும், 2021 திசெம்பர் 31 ஆம் திகதியில் ரூபா. 3.35 மில்லியன் தொகை பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய தொகையாக உள்ள 61 வாடிக்கையாளர்களிடம் இருந்து இவ்வாறு பாதுகாப்பு பிணை வைப்புத்தொகை பெற்றுக்கொள்ளப்பட்டிருக்க வில்லை. அதே போன்று, ஒருசில வாடிக்கையாளர்களிடம் பெற்றுக் கொள்ளப்பட்ட பாதுகாப்பு பிணை வைப்புத்தொகையுடன் ஒப்பிடும்போது 2021 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு அந்த வாடிக்கையாளர்களிடம் இருந்து வரவேண்டிய நிலுவை மீதி மிகக் கூடிய பெறுமதியைக் கொண்டுள்ள சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. அதற்கமைய, 19 வாடிக்கையாளர்களுக்கு உரிய பெற்றுக் கொள்ளப்பட வேண்டிய தொகை ரூபா. 1.78 மில்லியனான போதிலும், | தற்போது நவம் மாவத்தை வாகனத் தரிப்பிடத்தை பயன்படுத்தும் வாடிக்கையாளர்களுடன் செல்லுபடியாகும் எழுத்து மூல உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன், எதிர்காலத்தில் சட்டப் பிரிவின் ஒத்துழைப்புடன் உடன்படிக்கை தயாரிக்கப்பட்டு உரிய நிறுவனங்களுடன் ஒப்பந்தமிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. 2021 டிசம்பர் 31 ஆம் திகதியில் கடன்பட்டோர் 61 பேரிடமிருந்து ரூபா.3.35 மில்லியன் அறவிடப்பட வேண்டியதாக குறிப்பிடப்பட்ட போதிலும், 2022 மே 31 ஆம் திகதி வரையிலும் அந்த மீதி ரூபா.676,031.39 அளவில் ஆகும். மேலும், அந்த கடன்பட்டோரில் ரூபா.447,053.72 தொகை தற்போது வாகனத் தரிப்பிடத்தில் இருந்து அகற்றப்பட்டு உள்ள செயற்படாத கடன்பட்டோரைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அந்த வாடிக்கையாளர்களில் பெரும்பாலானோர் 2017 ஜூலை 01ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்யப்பட்டுள்ள மற்றும் 2018 ஆம் ஆண்டில் விலகிச் சென்றுள்ள வாடிக்கையாளர்கள் ஆவர். அதற்கமைய பணத்தினை அறவிட முடியாத கடன்பட்டோரைப் பணிப்பாளர் சபையின் அனுமதியின் பின்னர் கணக்கு ஏடுகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.. | வாகனத் தரிப்பிடத்தில் சேவையினைப் பெற்றுக் கொள்ளும் நிறுவனங்களுடன் முறையான உடன்படிக்கையை ஏற்படுத்தி, போதுமான பாதுகாப்புப் பிணை வைப்பினைப் பெற்றுக் கொள்ளுதல் மற்றும் நிலுவைத் தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல். |

| | | | |
|---|---|---|---|
| | தடுத்து வைக்கப்பட்ட பாதுகாப்பு வைப்புத் தொகை ரூபா. 867,497 மட்டுமே என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (உ) | சபையானது அரசாங்கத்தின் பிணைப் பொறுப்பு நிதியத்தில் முதலீடு செய்யும் முக்கியமான நிறுவனமானபோதிலும் பிணைப் பொறுப்பு ஏலத்தில் நேரடியாக விலை மனு சமர்ப்பிக்கும் வசதியினை (Direct Bidding Facility) இலங்கை மத்திய வங்கியிடம் இருந்து பெற்றுக் கொண்டிருக்கவில்லை. 2016 ஓகஸ்ட் 26 ஆம் திகதி இடம்பெற்ற பொது வணிகம் தொடர்பான செயற்குழுக் கூட்டத்தில் இலங்கை மத்திய வங்கியின் அடிப்படை வாடிக்கையாளராகப் (Primary dealer) பதிவு செய்யப்படுவதற்கு உத்தரவிடப்பட்டு இருந்தபோதிலும் 2021 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இந்த வசதியினைப் பெற்றுக் கொள்வதற்கு மற்றும் பேணிச் செல்லுவதற்காக அதிக செலவினை சபைக்கு ஏற்க நேரிடும். ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்தல் நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் மற்றும் பணிப்பாளர் சபையின் அனுமதியைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் மத்திய வங்கியினால் தெரிவிக்கப்பட்டுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். 2022 ஆம் ஆண்டு தொடக்கம் புதிய ஊழியர்களை ஆட்சேர்ப்பு செய்தல் இடைநிறுத்தப்பட்டுள்ளமை இது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குத் தடையாக உள்ளது. இந்த வசதிகள் அரச வங்கியான மக்கள் வங்கியின் மூலம் தற்காலத்தில் எதுவித செலவும் இன்றி மற்றும் மேலதிக ஊழியர்களை ஈடுபடுத்தாது பெற்றுக் கொள்ளப்படுகின்றது. | பொது வணிகம் தொடர்பான செயற்குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட கட்டளைகளை செயல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பு ஆகும். |
| (ஊ) | 2020 ஆம் ஆண்டில் பொருள் கணக்கெடுப்பு அறிக்கைக்கு அமைய சபையின் அசையா சொத்துக்கள் 95 உருப்படிகளுக்குரிய 1456 பொருட்கள் குறைவாகவும், 78 சொத்து உருப்படிகளுக்குரிய 825 பொருட்கள் மேலதிகமாகவும், 48 சொத்துகளுக்கு உருப்படிகளுக்குரிய 309 பழைய பொருட்களும் அடையாளம் காணப்பட்டு இருந்த போதிலும், அது தொடர்பில் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை. | நாட்டில் நிலவிய தொற்றுநோய் நிலைமை காரணமாக 2020 ஆம் ஆண்டுக்கான பொருள் கணக்கெடுப்பு அறிக்கையைப் பூர்த்தி செய்வதற்கு 2021 நவம்பர் வரையான காலம் செலவிடப்பட்டது. அதற்கு இடையில் 2021 ஆம் ஆண்டுக்கான பொருள் கணக்கெடுப்பும் மேற்கொள்ளப்படுவதுடன் அதன் அறிக்கை 2022 ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. இது வரையில் அதன் காரணங்கள் கோரப்பட்டுள்ளதுடன், இந்த இரண்டு அறிக்கையிலும் உள்ள காரணிகள் தொடர்பில் மேலதிக நடவடிக்கை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | பொருத்தமான வழிமுறைகளை உடனடியாக மேற்கொண்டு நிதிக் கூற்றுக்களில் தேவையான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2021 நவம்பர் 29 ஆம் திகதி ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2022 ஜனவரி 4 ஆம் திகதி வரையில் சபைக்கு 228 லேப்டொப் கணனிகளை ரூபா 37,260,900 தொகைக்கு வழங்குவதற்கு e-wis நிறுவனம் உடன்பட்டிருந்த போதிலும் 2022 மே மாத தருவித்தல் கட்டளையில் 90 கணனிகள் மட்டுமே வழங்கப்பட்டிருந்தன. மேலும், ஒப்பந்தத்தின் பிரகாரம் வழங்கப்படாத தொகைக்காக அதன் பெறுமதியில் 0.5 சதவீத பெறுமதி வாரமொன்றுக்கான தண்டப் பணமாக அறவிடப்பட்டிருக்கவில்லை. | நாட்டில் நிலவிய பொருளாதார நிலைமை காரணமாக மீதிப் பொருட் தொகையினை வழங்குவதற்கு முடியாது என வழங்குநரினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய இதற்குரிய சட்டரீதியாக எடுக்கக் கூடிய நடவடிக்கை தொடர்பான ஆலோசனைகள் எமது சபையின் சட்டப்பிரிவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மேலும், செயலாற்றல் பொறுப்பில் **(Performance Guarantee)** குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களின் விலையில் 10 சதவீத தொகையை நீக்குவதற்கு உள்ள சாத்தியக்கூறுகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | சட்ட ரீதியான அறிவுரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2016 ஒகஸ்ட் 26 ஆம் திகதி இடம்பெற்ற பொது வணிகம் தொடர்பான செயற்குழு கூட்டத்தில் சபையின் அங்கத்துவ நிதி முதலீட்டு முகாமைத்துவ நடவடிக்கைக்கான பட்டய நிதி பகுப்பாய்வு பதவிக்கு நிரந்தர உத்தியோகத்தர் ஒருவரை உடனடியாக நியமிக்குமாறு சபைக்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும், 2022 மே கணக்காய்வு திகதி வரையிலும் அந்த பதவிக்கான உத்தியோகத்தர் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. | சபையினால் 2020 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் முகாமையாளர் பதவிக்கான வெற்றிடம் நிரப்பப்பட்டு இருந்ததுடன், நிறுவனத்தின் முதலீட்டு பிரிவின் வெற்றிடம் 2017 ஆம் ஆண்டில் நிரப்பப்பட்டிருந்தது. தற்போது பணிப்பாளர் சபையின் ஒரு அங்கத்தவர் வங்கித்துறையில் குறித்த நிறுவனங்களில் பணிப்பாளராக செயற்பட்ட அனுபவம் உள்ள உத்தியோகத்தர் ஆவார். பணிப்பாளர் சபையின் ஏனைய அங்கத்தவர்களும் அரச மற்றும் தனியார் பிரிவுகளில் திறமையான அனுபவம் மிக்க உத்தியோகத்தர்கள் ஆவர். அதனால் நிறுவனத்தில் தற்போதைய நடவடிக்கைகள் இடம்பெறுவது விரிவான வழிகாட்டலின் கீழ் ஆகும். தற்போதைய முதலீட்டுப் பிரிவு சிறந்த அனுபவமிக்க மற்றும் திறமையான பதவி அணியினரை கொண்டிருப்பதுடன், அந்த நடவடிக்கைகளை தன்னிச்சையாக | பொது வணிகம் தொடர்பான செயற்குழு கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். |

கொண்டு செல்வதற்குத் தேவையான அறிவு மற்றும் சக்தி அவர்களிடம் உள்ளது. மற்றும் CFA தகைமைகள் உள்ள நபரை நியமிப்பதற்காக பாரிய தொகையினை சபை செலவிடுவதற்கு நேரிடுவது டன், சபையில் காணப்படும் ஊழியர் சம்பளம் மற்றும் பிரதிபலன் நிலைமைகளின் அடிப்படையில் அவ்வாறான நபர் ஒருவரின் சேவையினைப் பெற்றுக் கொள்ளுவது சிரமமாகும்.